பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 06 புதன்கிழமை 22.11.2023 கதிர் 376

### ராஜபக்ஷக்களிடம் இழப்பீடு பெறப்படுமான என்ற

# சஜித்தின் கேள்வியால் நேற்று நாடாளுமன்றில் அமளிதுமளி

### ஆளும் தரப்பினர் எதிர்க் கட்சித் தலைவரைச் சூழ்ந்து இடையூறு

நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வியொன்றை எழுப்பியபோது, ஆளும்தரப்பு உறுப்பினாகள் இடையூறு விளைவித்ததன் காரணமாகச் சபையில் பெருங்குழப்பம்ஏற்பட்டது. சபை நடவடிக்கைகள்பாதிக்கப்பட்டன. மீண்டும்சபைநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது சபாநாயகர் கடுமையான உத்தரவுகளையும் பிறப்பிக்கவேண்டியவரானார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனதலைமையில் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

நாட்டின்பொருளாதாரவங்குரோத்து நிலைக்கு ராஜபக்ஷக்கள்தான் காரணம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து பொது ஜன பெரமுனவுக்குள் குழப்பங்கள் ஏற்பட்டன. கட்சியின் அரசியல் எதிர்காலம் என்ன, இனியார் தலைமை தாங்கப் போகிறார்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்கள் அல்லாத வேட்பாளர் யார், அவரால் ரணிலை எதிர்க்க முடியுமா என்கிற பல கேள்விகள் எழுந்ததால் ஏற்பட்ட குழப்பம் அது. இதனால் கட்சி சில்லுச் சில்லாக உடையும் வாய்ப்புக்கூட இருக்கின்றது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது.

இந்த தீர்ப்பு உள்ளிட்ட அரசியல் காய்நகர்த்தல்கள் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமிட்ட செயல் என்கிற குற்றச்சாட்டுக்களும் ☞ 2

## வரவு செலவுத் திட்ட 2ஆம் வாசிப்பு நிறைவேற்றம்

2024 வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம்வாசிப்புமீதானவாக்கெடுப்பு நேற்று 45 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் கிடைத்தன.

அதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு ☞ 2

## கொக்குத்தொடுவாய் புதைகுழியின் பரப்பை அறிய ஸ்கான் இயந்திரம் மூலம் ஆய்வு செய்யத் தீர்மானம்

(தவசீலன்)

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி எவ்வளவு தூரத்திற்கு வியாபித்துள்ளது என்பதைஅறியஸ்கான்இயந்திரம் மூலம் சோதனையிடப்பட உள்ளது என்று சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ தெரிவித்தார்.

இந்தப் புதைகுழி வீதிக்குக் கீழாக குறுக்குவாட்டிலும் நீண்டிருக்கும் சாத்தியம் இருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன்திங்கட்கிழமை தெரிவித்திருந்தார். மனிதப் புதைகுழியின் இரண்டாவது கட்டம் தொடங்கப்பட்ட பின்னர் அதனைப் பார்வையிட்ட அவர், செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில் புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்பதனை அறிய நவம்பர் 24 ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனையிடபடவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் 2ஆம் கட்ட அகழ்வுப் பணியானது இரண்டாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது. நேற்றுஇரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அந்த எலும்புக்கூட்டு உடற்பகுதியில் இருந்து துப்பாக்கிச் சன்னங்கள், குண்டுச் சிதறல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் இலக்க தகடு ஆகியன எடுக்கப்பட்டன.

கண்டெடுக்கப்பட்ட இலக்கத்தகடுகள்தொடர்பானவிடயங்கள்பின்னர் அறியத்தரப்படும். தொடர்ந்து இப்பணி முன்னெடுக்கப்படும். நவம்பர் 24அம் திகதி வெள்ளிக்கிழமைஸ்கான் இயந்திரம் மூலம் இவ் மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்துஇருக்கின்றது எத்தனை படைகளில் எலும்புக்கூடுகள்அடுக்கப்பட்டிருக்கின்றன எனும் தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை ☞ 2

## இந்தியாவின் தோல்வியை தாங்க முடியாத கிரிக்கெட் இரசிகர்கள் இருவர் தற்கொலை

### அதிர்ச்சியில் மேலும் ஒருவர் உயிரிழப்பு

உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் தோல்வியைத் தாங்க முடியாத பல இந்திய விளையாட்டு ரசிகர்களின் பரிதாபகரமான கதி குறித்து வெளிநாட்டு ஊடகங்கள் பல செய்தி வெளியிட்டுள்ளன.

தோல்வியை ஏற்க முடியாதஇந்தியர்ஒருவர் அதிர்ச்சியில்உயிரிழந்தார் எனவும் ☞ 2

## பிரதி பொலிஸ் மா அதிபர் பணியகம் முன்பாக வவுனியாவில் ஏழு கடைகளில் தொடர் திருட்டு

வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் முன்பாகவுள்ள 7 வியாபார நிலையங்களில் தொடர் திருட்டுஇடம்பெற்றுள்ளது. திங்கட்கிழமை இரவு இந்த தொடர் திருட்டு நிகழ்ந்துள்ளது.

வவுனியா, கண்டி வீதியில் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயம் அமைந்துள்ளது. அதன் முன்பாக அமைந்தள்ள வியாபாரநிலையங்களின் கதவுகளை உடைத்து உள்நுழைந்ததிருடர்கள் அங்குவைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிச் ☞ 2

## மாவீரர்கள் நினைவாலயம் நல்லூரில் நேற்றுத் திறப்பு

### பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களுடன்



மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள்கொண்ட மாவீரர் நினைவாலயம் நேற்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. மாவீரர்களின் பெற்றோர்கள், முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இந்த நினைவாலயம் திறக்கப்பட்டது.

உலகெங்கும் ☞ 8

## தொடருந்து மோதி முறிகண்டி அருகே யானை உயிரிழப்பு

முல்லைத்தீவு முறிகண்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் யானை தொடருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகிய நிலையில் உயிரிழந்துள்ளது. நேற்றுப் பிற்பகல் 6.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த உத்திரதேவி தொடருந்துடன்மோதியே விபத்துக்குள்ளானது.

விபத்தில் சிக்கிய யானை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில், வனஜீவராசிகள் திணைக்களஅதிகாரிகள் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதி மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட் ☞ 2

## வடக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்கு சொல்ஹெய்ம் முழு ஒத்துழைப்பு

### ஆளுநர் சார்ள்ஸிடம் அவரே நேரில் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கும் வட மாகாண ☞ 8

## 19 வயது உலகக் கிண்ண கிரிக்கெட் 2024 இலங்கையில் நடைபெறாது

### தென்னாபிரிக் காவுக்கு மாற்றியது சர்வதேச கிரிக்கெட் சபை

இலங்கை கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தொடர்ந்து 19 வயதுக் குட்பட் டோருக்கான உலகக்கிண்ணப்போட்டிகளை இலங்கையில் நடத்துவதில்லை என்று சர்வதேச கிரிக்கெட் சபைதீர்மானித்துள்ளது. பதிலாக இந்தப் போட்டிகளை தென்னாபிரிக்காவில் நடத்துவது என்றும் அது முடிவு செய்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில்இந்த மு-டிவு எடுக்கப்பட்டது. அத்தோடு- இலங்கைக் கிரிக்கெட்டை இடைநிறுத்தும் தனது முடிவையும் அது உறுதி செய்தது.

இலங்கைக் ☞ 2

## யாழ். பல்கலைக்கழகம் சிங்கள மயமாகும் விரிவுரையாளர் அபாய எச்சரிக்கை விடுப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தமிழ் மக்களினுடைய பண்பாட்டு, பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாக்கின்றபல்கலைக்கழகமாக இருக்கின்ற நிலையைச் சிதைத்து, சிங்கள மாணவர்களை அதற்குள்புகுத்துவதற்காக ஆங்கிலமூல கற்கை நெறிகள் புகுத்தப்படுகின்றன. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிங்கள மயமாகும் அபாய எச்சரிக்கை. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி மும்மொழிகளிலும் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படுகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின்சட்டத்துறையில் ஆங்கிலமொழி மூலத்தில்மட்டும்கற்கை நடத்தப்பட்டுவருகின்றது, ஏன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலத்தில் சட்டக்கற்கையை உட்புகுத்த முடியாது?

இவ்வாறு கேள்வி எழுப்பினார்யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளரும்பல்கலைக்கழகஆசிரியர்சங்கஉறுப்பினருமான மா.இளம்பிறையன்.இதுதொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் மெலும் தெரிவித்ததாவது: ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சிக்குள் எழுப்பப்பட்டன. அதனால் ரணிலுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் பாடம் படிப்பிக்க வேண்டும் என்றுகூட கட்சியின் ஒருபகுதியினர் ஆவேசமடைந்திருந்தனர். இந்தக் குழப்பங்கள் அரசியல் பூகம்பத்தைக் கிளப்பக்கூடும் என்கிற எதிர்பார்ப்பும் இருந்தது.

அத்தகைய அரசியல் எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் வரவு செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு பொய்ப்பித்துவிட்டது. வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 122 வாக்குகள் கிடைத்துள்ளன. இதற்கு முந்திய காலங்களில் ஆளும் தரப்பின் சில சட்டமூலங்களுக்குக் கிடைத்த வாக்குகளின் பலத்துடன் ஒப்பிடும்போது இது எவ்வளவோ மேம்பட்ட நிலை என்பதில் சந்தேகமில்லை. கடைசியாக ஆளும் தரப்புக்கு நாடாளுமன்றத்தில் 113 வாக்குகள் மட்டுமே கிடைத்திருந்தது.

வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நேற்று மகிந்த ராஜபக்ஷ வாக்களித்தார். அவரது மகன் நாமலும் மூத்த சகோதரர் சமலும் வாக்கெடுப்பைப் புறக்கணித்தார்கள். நாமல் இந்த வரவு செலவுத் திட்டத்தை பகிரங்கமாகவே விமர்சித்து வருகிறார். வரவு செலவுத் திட்டத்தை மட்டுமல்ல, ரணிலின் ஆட்சியையே அவர் தொடர்ந்து விமர்சிக்கிறார். ரணிலையும் சஜித்தையும் சேர்த்து வைத்து ஆட்சியை அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு பெரமுன எதிர்க்கட்சி வரிசைக்கு வந்துவிடவேண்டும், அதுவே அரசியலில் தமது தரப்பு நீடிப்பதற்கான சிறந்த வழி என்று நாமல் கருதுகின்றார். அந்த அரசியலை நோக்கியே அவரது நகர்வு இருக்கின்றது. ஆனால் அவரது தந்தையும் பழுத்த அரசியல் தலைவருமான மகிந்தவிடமிருந்து அதற்கு ஆதரவான சமிக்ஞைகள் எவையும் இல்லை.

ரணிலும் சஜித்தும் சேர்ந்து ஆட்சியமைப்பதற்கான வழி ஏதும் இல்லை என்பதும் அதற்குக் காரணமாக இருக்கலாம். எப்படியிருந்தாலும் ரணிலைக் கைவிடவதற்கோ ஆளும் தரப்பு என்கிற வசதியை ஒதுக்கிவிட்டு எதிர்த்தரப்பிற்குச் செல்லவோ மகிந்த தற்போதைக்குத் தயாராக இல்லை. அதற்காக மகனின் அரசியல் போக்கைத் தடுக்கவும் அவர் முற்படவில்லை. அரசியலில் நீண்ட அனுபவமும் நீக்குப் போக்கும் தெரிந்தவரான அவர், இதனையே தனது அரசியலாக முன்னெடுக்கின்றாரோ என்கிற கேள்வியும் இருக்கின்றது.

மாலைதீவில் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வுக்குச் சென்றுவிட்டு நாடு திரும்பிய ரணில் விக்கிரமசிங்க அன்றைய தினமே மகிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாள் நிகழ்வில் கலந்துகொண்டு அவரை வாழ்த்தினார். மகிந்த கேக் வெட்டும்போது அருகிலிருந்து 'ஹப்பி போர்த் டே டியூ'' பாடினார். அதற்குப் பரிசாகத்தான் வரவு செலவுத் திட்டத்திற்கு பெரமுனவின் முழுமையான ஆதரவு சிந்தாமல் சிதறாமல் வழங்கப்பட்டிருக்கின்றதோ என்று இப்போது எண்ண வேண்டியிருக்கிறது.

அரசியலில் வாய்ப்புக்களை வசதிகளாக்கிக்கொள்ளும் கலையை ரணிலுக்குச் சொல்லியா தரவேண்டும்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகியபோது, நிலையியற் கட்டளை 27இன் கீழ் இரண்டில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்விகளைத் தொடுத்தார்.

2019ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டுவரையிலான காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தினை சீர்குலைத்தமைக்காக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினைக் குறிப்பிட்ட சஜித், தீர்ப்பின் பிரகாரம் பொருளாதார குற்றமிழைத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் தொடர்பில் கேள்விகளை எழுப்பினார்.

நாட்டின் 220 இலட்சம் மக்களையும் நெருக்கடியில் ஆழ்த்தியவர்கள் அவர்களுக்கான இழப்பீடுகளை வழங்க வேண்டும். அதற்காக அவர்களிடத்திலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு எதிராக ஆரம்பத்தில் கோசங்களை எழுப்பிய ஆளும் தரப்பினர் பின்னர் தமது இருக்கைகளை விட்டெழுந்து எதிர்க்கட்சித் தலைவர் முன்னிலையில் ஒன்றுகூடிக் கோசங்களை எழுப்பினார்கள். குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவரின் சகோதரி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தி கோசங்களை எழுப்பியதோடு அவரது கேள்விக்குத் தொடர்ச்சியான இடையூறுகளை ஏற்படுத்தினார்கள்.

அப்போது லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் கபீர் ஹாசீம் ஆகியோர் சஜித் பிரேமதாசவுக்கு அருகில் எழுந்து நின்று பாதுகாப்பு அளித்தனர். எனினும் ஆளும் தரப்பின் உறுப்பினர் சனத் நிஷாந்த எதிர்க்கட்சித் தலைவரின் ஒலிவாங்கியை தம்பக்கம் திருப்பியவாறு இடையூறு ஏற்படுத்தினார். ஏனைய ஆளும் தரப்பு உறுப்பினர்களும் கடுமையான எதிர்ப்புக் கோசங்களை வெளியிட்டனர்.

இந்தச் செயற்பாடுகளை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முகநூல் வழியாக நேரலை செய்து கொண்டிருந்தார். அத்துடன் உறுப்பினர்களின் வார்த்தைப் பிரயோகங்கள் மோசமடைந்தமையால் சபாநாயகர் மஹிந்த யாப்பா பார்வையாளர் பகுதியிலிருந்த மாணவர்கள் மற்றும் இதர விருந்தினர்களை அங்கிருந்து வெளியேற உத்தரவிட்டார்.

உறுப்பினர்களை இருக்கைகளில் அமருமாறு தொடர்ச்சியாக அறிவுறுத்தினார். எனினும், ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் சபாநாயகரின் உத்தரவுக்கு செவிசாய்க்கவில்லை. அதுமட்டுமன்றி, சஜித் பிரேமதாச தனது கையில் வைத்திருந்த கேள்வி ஆவணத்தை, ஆளும் தரப்பு உறுப்பினர் சனத் நிஷாந்த பறித்தெடுத்தார். இதனால் அமைதியின்மை தீவிரமடைந்தது. தொடர்ந்து சபாநாயகர் சபையை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கிறார் என்று அறிவித்தார்.

### 30 நிமிடங்களுக்கு பின்னர் ஆரம்பம்

தொடர்ந்து கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டது. சபை நடவடிக்கைகள் 30 நிமிடங்களுக்குப் பின்னரே ஆரம்பமாகின. இச்சமயத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, சபைக்குள் கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தி புகைப்படம், வீடியோ எடுத்தல் மற்றும் நேரலை ஒளிபரப்பு உள்ளிட்ட செயற்பாடுகளை உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும், சபையின் மோசமான செயற்பாடுகளை அவ்வாறு பதிவுசெய்வதற்கும், நேரலையாக ஒளிபரப்புவதற்கும் இன்று முதல் (நேற்று) முதல் தடைவிதித்து சபைக்கு அறிவிக்கின்றேன் என்றார். குறித்த அறிவிப்பு உட்பட நாடாளுமன்ற ஒழுங்கு விதிகளை மீறி செயற்படுவோருக்கு எதிராக கடும் நடபவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

### நடவடிக்கை எடுக்கப்படும்

இச்சமயத்தில், ஒங்குப்பிரச்சினையை எழுப்பியவாறு எழுந்த எதிர்க்கட்சிப் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை உரையாற்றவிடாது இடையூறு விளைவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் தனக்குள்ள உரிமைகளின் அடிப்படையில்தான் சபையில் கேள்விகளைத் தொடுத்தார். அதற்கு சபாநாயகராகிய நீங்களும் அனுமதி அளித்துள்ளீர்கள். ஆகவே அனுமதிக்கப்பட்ட விடயத்தினை திட்டமிட்டு ஆளும் தரப்பினர் தடுத்துள்ளனர். இதனால் அவருடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன. அன்று அஜித் மானப்பெரும விடத்தில் சபாநாயகராகிய நீங்கள் தண்டனை வழங்கினீர்கள் அதேபோன்று இன்றும் நடவடிக்கைகளைத் தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

லக்ஸ்மன் கிரியெல்லவின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும். அஜித் மானப்பெரும தண்டனை வழங்கும் தவறினையே செய்திருந்தார். அதனால்தான் அவருக்கு தண்டனைக்கான உடன் அறிவிப்பு வழங்கப்பட்டது என்றார்.

இதனையடுத்து, எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எனது கேள்வி ஆவணத்தை பறித்துச் செல்வதற்கு ஆளும் தரப்பிற்கு உரிமை உள்ளதா. அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்க முடியுமா? அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று கேள்விகளைத் தொடுத்தார்.

அந்தச் செயற்பாடு தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## கொக்குத்தொடுவாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டிருக்கின்றது.

களனி பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினரே குறித்த ஸ்கான இயந்திரத்தினை கொண்டு வரவுள்ளனர் - என்று அவர் தெரிவித்தார்.

## பிரதி பொலிஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வியாபார நிலைய உரிமையாளர்கள் பொலிசாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து சிசீடிவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

7 கடைகளில் இடம்பெற்ற இத் திருட்டில் 50 ஆயிரம் ரூபாய் வரையிலான பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(100)

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இருவர் தற்கொலை செய்து கொண்டனர் எனவும் அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உலகக்கோப்பை இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் இந்தியா படுதோல்வியடைந்தது. லீக் மற்றும் அரை இறுதி ஆட்டங்கள் எதிலும் தோற்காமல் விளையாடி வந்த இந்தியா லீக் போட்டியில் ஏற்கனவே ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்திருந்தது. அதனால், இந்தியா கிண்ணத்தை வெல்லும் என்று பரவலாக நம்பப்பட்டது.

அதற்கு மாறாக இந்தியா படுதோல்வியடைந்தபோது இந்திய ரசிகர்களால் அதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று ஊடகங்கள் கூறுகின்றன.

## யாழ். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குக் கிழக்கிலே பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்குகின்ற வளாகங்களைப் பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்த விண்ணப்பிக்கும்போது அரசும் மிக அவசரமாக அதற்கு அனுமதி வழங்குகின்றது. ஆனால் தென்பகுதியில் எந்தவொரு பல்கலைக்கழகங்கத்தையும் தொடங்குவதற்கு அரசு அனுமதியை வழங்குவதில்லை, காரணம் வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழங்களின் தமிழ் சாயத்தைத் சிதைத்து, தமிழ் பண்பாட்டை சிதைத்து, பெரும்பான்மை சிங்கள மாணவர்களை இங்கு புகுத்துவதுதான். அதன் மூலம் தமிழ் மக்களின் பல்கலைக்கழங்களைச் சிதைப்பதைத்தான் அரசு செய்கின்றது.

தமிழர்களுடைய தாயகபூமியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானபீடம், முகாமைத்துவ பீடம், மற்றும் கிளிநொச்சியிலுள்ள பீடங்களில் பெரும்பான்மையாக சிங்கள மாணவர்களே காணப்படுகின்றனர். எமது தமிழ் மாணவர்கள் கல்வி பயில்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்திலே தொடங்கப்பட்ட கற்கைநெறிகளுக்கும் எமது மாணவர்களிலும் பார்க்க அதிகளவில் சிங்கள மாணவர்களே உள்வாங்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் என்ற பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்றால் சகல கற்கைநெறிகளும் தமிழ்மொழியிலும் போதிக்கப்படவேண்டியது அவசியமாகும். கலைப்பீட கற்கை நெறிகளைக்கூட ஆங்கில மொழியில் கற்பிக்கவேண்டும் என்ற அழுத்தத்தினை ஆட்சியாளர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக எமது பல்கலைக்கழகத்திற்கு வழங்கி வருகின்றனர். இருப்பினும் பெரும் எதிர்ப்பின் காரணமாக அந்த முயற்சி கைகூடாமல் இருக்கின்றது.

சிங்களமொழி மாணவர்கள் பெரும்பான்மையாக இருப்பதைக் காரணம் காட்டி இங்கு சிங்கள ஆளணி நியமனத்தை மேற்கொள்ள வேண்டிய தேவையும் உருவாகி வருகின்றது. ஏன் சட்டத்துறையில் கூட சிங்கள நிரந்தர விரிவுரையாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்களை நியமிக்கக்கூடாதென்று யாரும் சொல்லவில்லை, ஆனால் அது எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பாக மாறும் என்பதை நாங்கள் மறுக்க முடியாது. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிங்களமயமாகும் என்பதற்கான அபாய எச்சரிக்கை -என்றார்.

# கோட்டா தேர்தலில் வென்றதும் ஒதுங்கி ஓட முற்பட்டவர் சஜித்

## பெரமுனவின் எம்.பி. நேற்று எகத்தாளம்

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வென்றவுடன் அரசியலைவிட்டு ஒதுங்கி ஓடுகின்றேன் என்று அச்சமடைந்தவர்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணர்த்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு, செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறீ லங்கா பொது ஜன பெரமுன என்ற அடிப்படையில் இந்த வரவு செலவுத்திட்டத்தினை நாம் தோற்கடிப்போம், இதனை வெற்றிபெற விடமாட்டோம் என்று நாம் அறிவித்தால் எதிர்க்கட்சியினைச் சேர்ந்த சிலர் அதனைக் கொண்டாடுவார்கள். சமையலில் ஏற்பட்ட குறைபாடுகளுக்காக மனைவியை விவாகரத்துச் செய்ய முடியாது. அவ்வாறாயின் பின்னர் யாரைத் திருமணம் செய்யப்போகின்றீர்கள் என்ற கேள்வி எழும்.

நாட்டைப் பொறுப்பெடுத்து குறைபாடுகளைச் சரிசெய்யுமாறு கோரியபோது அதனை ஏற்பதற்கு முன்வராதவர்களா தற்போது இந்த நாட்டை வழிநடத்தப்போகின்றார்கள்? தற்போது பொருளாதாரக் குற்றம் சம்பந்தமாக பேசப்பட்டது. பொருளாதார குற்றவாளிகள் என்று யாரை அவதூறு செய்கின்றார்கள்.

எதிர்க்கட்சித் தலைவருடன் ஆறு பேரே உள்ளனர். ஏனைய உறுப்பினர்கள் எங்கே என்ற கேள்வி எமக்குள்ளது. அங்கே மூத்தவர்களை காணக்கிடைக்கவில்லை. சஜித் பிரேமதாச தண்ணீர்ப் போத்தலை எடுத்து அருந்திக்கொண்டே நான் பயப்பிடவில்லை. நான் பயப்பிடவில்லை என்று தொடர்ச்சியாகக் கூறிக்கொண்டிருக்கின்றார்.

பொதுவாக அச்சமடைபவர்கள் தான் தாம் எதற்கும் பயப்பிடவில்லை என்று அடிக்கடி கூறுவார்கள். தண்ணீரை அருந்துவார்கள். மயானத்துக்கு அருகில் செல்பவர்கள் அச்சமில்லை என்று கூறினாலும் கத்திக்கொண்டே செல்வார்கள். இந்த நேரத்தில் எனக்கொரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. இப்போது மார்பைத் தட்டி பயமில்லை என்று கூறிய சஜித் பிரேமதாச அச்சமடைந்த தினமொன்றைக் கூறுகின்றேன்.

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளிவந்து முடிவடைந்தவுடன் நான் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அருகில் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் அதனை எடுத்து பகிரங்க ஒலிவாங்கியில் (அவுட் ஸ்பீக்கர்) போட்டார். அப்போது ஒரு குரல், சேர் நான் சஜித் பிரேமதாச. நான் அரசியலில் இருந்து விடைபெறுகின்றேன். என்னை தொந்தரவு செய்யாதீர்கள். நான் யானைகள், பறைவைகள் உள்ளிட்டவற்றை புகைப்படங்கள் பிடிக்க விரும்புகின்றேன். அந்தச் செயற்பாட்டுக்குத் தொந்தரவளிக்காதீர்கள். நான் ஒதுங்கிக்கொள்கின்றேன் என்றார். அப்போது எதிர்க்கட்சித்தலைவரின் அச்சத்தை நான் பார்த்தேன். பின்னர், அதே சஜித் பிரேமதாச போராட்டக்களத்துக்குச் சென்றபோது சுசந்திகாவை விடவும் வேகமாக ஓடியதையும் பார்த்தேன். அச்சப்பட வில்லை என்றால் அங்கே நின்றிருக்கலாம் - என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டமையால், பொலிஸார், வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தொடருந்து அதிகாரிகளால் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## வரவு செலவுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் என்ற வகையில், அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நவம்பர் 13 நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதன் மூன்றாம் வாசிப்பின் மீதான விவாதம் இன்று முதல் டிசம்பர் 13 வரை நடைபெறவுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக மஹிந்த ராஜபக் ஷ வாக்களித்தார். சமல் ராஜபக் ஷ மற்றும் நாமல் ராஜபக் ஷ ஆகியோர் வாக்களிப்பைப் புறக்கணித்தனர்.

## 19 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரிக்கெட் தனது செயல்களைத் தன்னாட்சி மற்றும் அரச தலையீடு இல்லாமல் நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து அதற்குத் தடை விதிக்கப்பட்டபோதும், இருதரப்பு கிரிக்கெட் மற்றும் ஐசிசி போட்டிகளில் சர்வதேச அளவில் இலங்கை அணி பங்குபற்றுவதற்கான அனுமதியையும் சர்வதேச கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட்டுக்கான நிதியுதவி சர்வதேச கிரிக்கெட் சபையால் கட்டுப்படுத்தப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், திருநங்கைகளை பெண்கள் கிரிக்கெட் அணியில் உள்வாங்குவதற்கான முடிவையும் சர்வதேச கிரிக்கெட் சபை எடுத்துள்ளது. பாலின மாற்று அறுவைச் சிகிச்சை அல்லது பாலின மறுசீரமைப்பு சிகிச்சைகளைப் பொருட்படுத்தாமல் சர்வதேச பெண்கள் கிரிக்கெட்டில் விளையாட அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பில் ஒவ்வொரு நாட்டுக் கிரிக்கெட் சபையும் தனித் தனியாக முடிவுகளை எடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2 வருடங்களின் பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபை தனது இந்த முடிவை மீளாய்வு செய்யும்.

'பாலின தகுதி விதிமுறைகளில் மாற்றங்கள் ஒரு விரிவான ஆலோசனைகளின் பின்னர் மேற்கொள்ளப்பட்டன, மேலும் இது அறிவியலின் அடிப்படையிலானது மற்றும் கலந்துரையாடல்களின் போது உருவாக்கப்பட்ட முக்கிய கொள்கைகளுடன் இணைந்துள்ளது. உள்ளடக்கம் என்பது ஒரு விளையாட்டாக எங்களுக்கு நம்பமுடியாத அளவிற்கு முக்கியமானது, ஆனால் சர்வதேச பெண்கள் விளையாட்டின் ஒருமைப்பாடு மற்றும் வீரர்களின் பாதுகாப்பு என்பவற்றிற்கு நாங்கள் முன்னுரிமை வழங்கினோம்'' என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி ஜியோவ் அலார்டிஸ் தெரிவித்தார்.

# வெளிநாட்டில் பணிபுரியும் வீட்டுப்பணிப்பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்

## மனுஷ நாணயக்கார உத்தரவாதம்






வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள வீட்டுப் பணிப் பெண்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் எனக் கூக்குரலிடும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இருந்த போதிலும், குறைந்த சம்பளத்துக்கு அடிமைகள் போன்று பணிபுரியும் உள்ளூர் வீட்டு வேலை யாள்கள் தொடர்பில் குரல் எழுப்புவதில்லை. இதற்கான தீர்வை வழங்கி அவர்களைக் கௌரவிக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்பபடுத்தப்படுவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

முறைசாரா ஊழியர்களுக்கு தொழில் கௌரவத்தை பெற்றுக்கொடுப்பதற்காக 'கரு சரு' வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுப்பணிப்பெண்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முறைசாரா சேவையில் ஈடுபட்டுள்ளோரின் தொழில் கௌரவத்தை மேம்படுத்துவதற்கான 'கருசரு' என்ற வேலைத்திட்டத்திற்கு பொது மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவிதற்கான தொடர் செயல் அமர்வின் இரண்டாவது அமர்வுதொழில்மற்றும்வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது.

வீட்டுப்பணிப்பெண் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு தொழில் கௌரவத்தை சட்ட ரீதியில் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களுக்கு ஏனைய தொழிலாளர்களுக்கு உள்ள ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட நன்மைகளை வழங்கி தொழில் பாதுகாப்பை உரித்தாக்கு-வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே கரு சரு வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் என்று அமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்தார்.

ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலமாக இதுகுறித்து நாம் பேசினோம். தேவை-யான அடிப்படை நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். நாம் தற்போது முறைய-ான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தற்போது கலந்துரையாடுகின்றோம். இதற்கான அடிப்படை அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளோம்.

இலங்கையில் ஈ.பி.எவ்.,ஈ.ரி.எவ். ஆகியவற்றுக்கு பங்களிப்பு செய்பவர்களின் எண்ணிக்கை சுமார் 25 லட்சமாகும். அதாவது முதலாளிமாருக்கும் ஊழியர்களுக்குமிடையில் நேரடி தொடர்பு இல்லாதவர்களே இதற்குப் பங்களிப்பு செய்கின்றனர்.

எல்லோரும் தங்களால் இயலுமான வரையில் தொழில் செய்கிறார்கள். வீட்டு வேலை செய்பவர்கள், மேசன் பாஸ் போன்ற அனைத்து முறைசாரா துறைகளில் ஈடுபடுபவர்கள் தங்கள் கை மற்றும் கால்கள் வலுவாக இருக்கும் வரை தொழில் செய்கிறார்கள். அதன் பிறகு, அவர்கள் எந்த பாதுகாப்பும், வாழ்வாதாரமுமின்றித் தவிக்கும் நிலை உண்டு.

அரச ஊழியர்களைக் கவனத்தில் கொள்வோமாயின், அவர்கள் மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் வாங்குகிறார்கள். மேலும் அவர்களுக்கு ஓய்வூதியம் உண்டு.

அவர்கள் இறக்கும் வரை அந்த ஓய்வூதியத்திற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. மகப்பேறு விடுமுறை போன்ற பல நன்மைகள் உள்ளன. தனியார் துறை ஊழியர்களுக்கும் இதே வசதிகள் உள்ளன. அவர்களுக்கு ஓய்வூதியத்திற்குப் பதிலாக ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ். நிதி போன்ற நன்மைகள் உள்ளன.

ஏதேனும் விபத்து ஏற்பட்டால் அது குறித்து கவனம் செலுத்து-வதற்கோ அல்லது 55 வயதான பின்னர் கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கு இவர்களுக்கு மாத்திரமே உரிமை உண்டு. இதே போன்று தாய் சேய் விடுமுறையை பெற்றுக்கொள்வதற்கும் இவர்களுக்குவசதி உண்டு என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முறைசாரா சேவையில் ஈடுபட்டுள்ளோரால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தொழில் கௌரவம் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 142 விதிகளுக்கு அமைந்ததாக வடிவமைப்பதே தொழில் அமைச்சின் நோக்கமாகும்.

இவை வர்த்தமானி அறிவிப்பின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின் இந்த விதிகளுக்கு மாறாகச் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சர் மனு நாணயக்காரவின் எண்ணக்கருவுக்கு அமைவாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 'கரு சரு' என்ற வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

'கரு சரு' வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் அமைப்பு தொழிற்சங்க கட்டமைப்பு அல்ல. சட்டத்தரணிகள், வைத்தியர்கள் போன்றோருக்காக இருக்கும் அமைப்புகளாகும். இவை தொழில் அமைச்சில் பதியப்பட்டவை அல்ல.

வீட்டுப் பணிப்பெண் மற்றும் ஓட்டோ ஓட்டுநர் முதலானவர்களுக் காக தொழில் கௌரவ அங்கீகரிப்பு உள்ளிட்ட நன்மைக்கான ஆலோசனைகளை முன்வைப்பதற்காக இவ்வாறான அமைப்பை அமைத்து அதன் ஊடாக முன்வைக்கப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் சட்டரீதியிலான அங்கீகாரத்தை வழங்கு-வதற்கே நாம் முயற்சிக்கின்றோம் என்றும் அமைச்சர் விவரித்தார்.

வெளிநாடுகளில் வீட்டுப்பணிப் பெண்ணை பணிக்கு அமர்த்தவிரு-ம்பும் ஒருவர் அதற்கான அனுமதியை அந்நாட்டு அரசாங்கத்திடமி ருந்து பெறவேண்டும். இதே போன்ற நடைமுறை நமது நாட்டிலும் இருக்க வேண்டும். தொழில்ரீதியிலான அனுமதிபத்திரம் வேண்டும். இதற்கு வழிவகை செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கு வீட்டுப்பணிப் பெண் என்.வி.கியு. தரம் ஒன்று, இரண்டு, மூன்று என்ற தொழில் தகுதி நிலைக்கு தகுதிக்கு வழிவகை செய்து கொடுப்பதே எமது நோக்கமாகும். எனவே, இந்த விடயங்களை விரிவுபடுத்தி அனைத்து உழைக்கும் மக்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அமைப்பு கட்டமைப்பை தயாரிப்பதற்கு அங்கீகாரம் வழங்குமாறு அமைச்சரவைக்கு பரிந்துரைத்தோம்.

6 மாதங்களுக்குள் இந்த வேலைத்திட்டத்தை அமைச்சரவை முன்வைக்க வேண்டும் என்று அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த வருடம் மே மாதமளவில் நாடு தீ பற்றி எரிந்தது. நாடாளுமன்றத்தையும் தீ வைத்து அரசாங்கத்தை கைப்பற்ற முனைந்தனர்.

அந்த காலப்பகுதியில் பொருள்களின் விலைகள் வேகமாக அதிகரித்தன. இதேபோன்று பொருள்களின் விலைகள் அதிகரித்தால் இன்று நாம் பிச்சை எடுக்கும் நிலையிலும் பார்க்க மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்போம்.

பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்றும் அமைச்சர் மனு நாணயக்கார மேலும் தெரிவித்தார். (05)

# சித்தங்கேணி இளைஞன் உயிரிழந்த சம்பவம்: சம்பந்தப்பட்ட பொலிஸாரைக் கைது செய்க

## சட்டத்தரணி மணிவண்ணன் வலியுறுத்து



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வழக்கம்பரை பகுதியில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்-யப்பட்ட நாகராசா அலெக்ஸ் என்ற 23 வயது இளைஞன் உயிரிழந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது எனவும், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ-ாரை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் சிரேஸ்ட சட்டத்தரணியும் யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்;த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு-

பொலிஸ் காவலில் வைத்து சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், விளக்கமறியலில் வைக்கப்பட்டு, உடல்நிலை சீராக இல்லாத நிலையில் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

அந்த இளைஞன் உயிரிழப்பதற்கு முன்னர் வெளியிட்ட காணொளியில், பொலிஸார் பெற்றோல் பையினுள் தன்னை நுழைத்து அடித்தனர் எனவும், தலைகீழாகக் கட்டித்தூக்கி முகத்தைத் துணியால் மூடிக் கட்டி, இரண்டு கைகளையும் பின் பக்கமாகக் கட்டி, தண்ணீர் ஊற்றி ஊற்றி அடிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒருநாள் முழுவதும் சாப்பாடு வழங்காமல், சாராயத்தைக் குடிக்கு மாறு வழங்கி குறித்த இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கோ அல்லது வேறு எங்குமோ சென்று முறையிடக் கூடாது என்றும் மிரட்டியதாக அந்த இளைஞன் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது எல்லாம் பொலிஸ் நிலையத்தில் நடக்கும்போது பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி எங்கே சென்றார்? அவர் ஏன் இதனைத் தடுக்கவில்லை. தாக்குதல் நடத்திய பொலிஸாரை ஏன் தண்டிக்கவில்லை.

மேற்படி சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இட மாற்றம் வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது. உயிரிழந்த இளைஞனின் மரண வாக்கு-மூலம் சித்திரவதைகள் அம்பலமாகும் நிலையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதுடன் விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது வெறும் கண்துடைப்பாகும். உடனடியாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் உத்தியே-ாகத்தர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அராஜகமான ரீதியில் செல்வதை ஊடகங்கள் மூலம் வெளியாகும் செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன. செய்தி சேகரிக்க செல்லும் ஊடகவி-யலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து அவர்களை செய்தி சேகரிக்க விடாது இடையூறுகளை விளைவிக்கின்றனர். தங்களது தரப்பில் உள்ள குற்றச்சாட்டுகளை மறைப்பதற்காகவா இவ்வாறு ஊடகவியலாளர்களைத் தடுக்கின்றார்கள் என்ற சந்தேகமும் எழுகின்றது.

எனவே, பொலிஸார் தமது கடமைகளைச் சரிவர செய்ய வேண்டும். சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டியது தான் பொலிஸ-ாரின் வேலை. அதை விடுத்து தாங்கள் சட்டத்தைக் கையில் எடுத்து சித்திரவதைகளில் ஈடுபட முடியாது - என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# வரவு - செலவுத் திட்டத்தை பெரமுன ஆதரிக்கக்கூடாது

## ஜி.எல். பீரிஸ் வலியுறுத்து



நாட்டில் அடுத்த வருடம் புதிய வரிக் கொள்கைகள் அமுல் படுத்தப்படவுள்ளன. இதன் காரணமாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்து மக்களின் வாழ்க்கை செலவு அதிகரிக்கும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை. எனவே பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து உள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தை பொதுஜன பெரமுன ஆதரிக்கக் கூடாது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதியால் முன்வைக்கப் பட்டுள்ள பட்ஜெட் நாட்டுக்கு பொருத்தமானதா? அல்லது தற்போது இருக்கும் நெருக்கடிகளை மேலும் உக்கிரமடைய செய்யும் ஒன்றா என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

அடுத்த வருடம் மேலும் புதிய வரிக் கொள்கைகள் அமுல் படுத்தப்படவுள்ளன. வற் வரி 60 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. இந்த வற் வரி நாட்டு மக்களிடமிருந்தே அறவிடப்பட இருக்கிறது.

இதன் காரணமாக அத்தியாவசிய பொருள்களின் விலைகள் அதிகரித்து, மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும். உழைக்கும் மக்கள் பாதிக்கப்படப் போகிறார்கள்.

இதேவேளை கடந்த 8 மாதங்களுக்குள் மின் கட்டணம் செலுத்தாத சுமார் 7 லட்சத்து 80 ஆயிரத்து 835 குடும்பங்களின் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதுவே நாட்டின் தற்போதைய நிலைமை.

எனவே, நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு வானத்தைத் தொடும் அளவுக்கு உள்ள நிலையில் இந்த வரவு - செலவுத்திட்டம் மீண்டும் அவர்களை நெருக்கடிக்குள் தள்ளும் என்பதை உணர்ந்து நாடாளுமன்றத்தில் நாம் வரவு - செலவுத்திட்டதுக்கு ஆதரவளிக்க வேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும்.

பணமில்லை எனக் கூறி நாட்டின் வளங்களை விற்பனை செய்கிறார்கள். நாட்டின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது. அதிக வரியை அறிவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். இருக்கும் கடனைச் செலுத்தாமல் மேலும் மேலும் கடன்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள் வெறும் கற்பனை கனவுகள். நடைமுறைக்குப் பொருந்தா.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பொதுஜன பெரமுனவிடமே இருக்கிறது. வரவு - செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா அல்லது தோற்கடிக்கச் செய்வதா என்பது அவர்களின் கைகளிலேயே உள்ளது.நாட்டின் பொருளாதாரம், நாட்டு மக்களின் எதிர்காலம் பெரமுன எடுக்கப் போகும் தீர்மானத்திலேயே தங்கியுள்ளது. -என்றார்.

(05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நிலமை மோசமடையும்

பொருளாதார மறுசீரமைப்பு என்கிற பெயரில் மக்கள் மீது தொடர்ச்சியாகச் சுமைகள் சுமத்துப்பட்டுக்கொண்டேவருகின்றன. மக்கள் ஆதரிக்காத, அவர்கள் விரும்பாத தீர்மானங்களை மேற்கொள்ளாமல் நாட்டின் பொருளாதாரத்தை மீட்சியடைய வைக்கமுடியாது என்று அரசுத் தலைவரால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாகவே இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது. அது மக்கள் மீதும் மேலும் அழுத்தங்களை வழங்கும்.

2022 ஒக்டோபர் மாதத்தில் உணவுப் பணவீக்கம் 85.6 சதவீதமாக இருந்தது. மக்கள் தொகையில் கணிசமான பகுதியினர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் சிரமப்படுகிறார்கள் என்று அதற்கு அர்த்தம். உலக உணவுத் திட்டத்தால் [நிய்உண] வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள், இன்னமும் 32% குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்றி இருப்பதைக் காட்டுகின்றன, மேலும் 68% குடும்பங்கள் குறைவான விருப்பமான உணவை உண்ணுதல் அல்லது உணவின் எண்ணிக்கை மற்றும் பகுதி அளவுகளைக் குறைத்தல் போன்ற உணவு அடிப்படையிலான சமாளிக்கும் உத்திகளின் மூலமே தம்மைத் தக்கவைத்துக் கொண்டுள்ளன.

கோட்டாபயவின் திடீர் விவசாய இரசாயன இறக்குமதித் தடையின் விளைவாக 2021/2022 பெரும்போக நெல் உற்பத்தி 40 வீதம் வீழ்ச்சியடைந்தது. 2022 சிறுபோகம் 50% வீழ்ச்சியடைந்தது. இதனால் விவசாயிகள் தங்கள் வயல்களைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடவேண்டியவர்களானார். பலரது வாழ்க்கை தெருவுக்கு வந்தது.

இலங்கையில் சுமார் 2.3 மில்லியன் குழந்தைகளுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக யுனிசெஃப் மதிப்பிட்டுள்ளது, இதில் 56,000 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் [நீபுனி] பாதிக்கப்பட்டுள்ளனர். இவை எல்லாமுமாகச் சேர்ந்துதான் மக்கள் கிளர்ச்சியை, அரகலயவை ஏற்படுத்தியது. கோட்டாவைப் பதவியிலிருந்து விரட்டியடித்தது.

ஜூலை 14, 2022 அன்று கோட்டாபய ராஜபக்ச முறைப்படி அரசுத் தலைவர் பதவியில் இருந்து விலகினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் புதிய அரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அதன் பின்னர் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கும், எதிர்ப்புக்களுக்குப் பின்னர் ஒழுங்கை மீட்டெடுப்பதற்குமான பணியை எதிர்கொண்டார்.

ரணில் பதவியேற்ற சில மாதங்களுக்குள், 2.9 பில்லியன் டொலர் கடன் மறுசீரமைப்பு வசதியை வழங்க பன்னாட்டு நாணய நிதியம் முன்வந்தது. இந்தியாவில் இருந்து 2 பில்லியனுக்கும் அதிகமான கடன் வசதியுடன் அந்நியச் செலாவணி நெருக்கடி தற்காலிகமாக சமாளிக்கப்பட்டது. கடை அலமாரிகளில் இருந்து காணாமல் போயிருந்த அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த அளவிலாயினும் திரும்ப வந்தன. பெட்ரோலியம் மற்றும் எல்பி எரிவாயு தட்டுப்பாடும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

உணவு நெருக்கடி தணிந்ததால் மக்களின் கிளர்ச்சி நிலையில் தளர்வு ஏற்பட்டது. ரணிலால் எதிர்ப்புகளை அடக்கவும் முடிந்தது. எவ்வாறாயினும், ஒரு புதிய நெருக்கடி உருவாகியது, உள்ளாட்சி தேர்தல்கள் மற்றும் மாகாண தேர்தல்கள் வரவிருந்தன. தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி நாட்டிடம் இல்லை என்று கூறி இரண்டு தேர்தல்களும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் பொருளாதார மீட்சிதான் காரணமாகச் சொல்லப்பட்டது.

இன்று – நமது நாடு திவாலாகி ஒரு வருடமாகியும், நாட்டில் பட்டினி நிலைமை தணிந்த போதிலும், எதுவும் முற்றாக நீங்கிவிடவில்லை. நான்கு பேர் [தந்தை, தாய் மற்றும் இரண்டு குழந்தைகள்] கொண்ட ஒரு குடும்பம் ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு மட்டுமே சாப்பிடுவதற்கு ஆகும் செலவு மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய். இருப்பினும், நாடு முழுவதும் சராசரி மாத ஊதியம் 40,000/– க்கும் குறைவாகவே உள்ளது.

கையறு நிலையில் இருப்பவர்களுக்கான உதவித் திட்டமாக அஸ்வெசும கூறப்பட்டாலும் அதனால் அடிப்படைத் தேவைகளைக்கூட முழுமையாகப் பூர்த்தி செய்யமுடியாத நிலையே இருக்கின்றது. பன்னாட்டு நாணய நிதியமும் ஆளும் தரப்பும் உதவி தேவைப்படுபவர்களுக்கான பாதுகாப்பு வலையமைப்பைப் பற்றிப் பேசினாலும், மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் நடைமுறையில் அதன் நன்மைகளை அடையவில்லை. இந்த நிலையில் 2024 வரவு செலவுத் திட்டம் வரிகள் மூலம் மக்கள் மீது மேலும் சுமைகளைச் சுமத்தும்போது நிலமை இன்னும் மோசமடையப் போகின்றது.

# ரணில் ஐ.தே.க வார்ப்பு அல்ல

உபுல் யோசப் பெர்னான்டோ



அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில், பாடகி ஒருவர் 'அமு சிந்து' என குறிப்பிடப்படும் 'பிடாகவேரே' பாடலைப் பாடினார். இதைக் கேட்ட, ஐக்கிய தேசியக்கட்சியினர் திகைத்துப் போனார்கள். அந்தப் பாடலைப்படிய சூரியகாந்திக்கு ரசிகர்களிடம் இருந்து எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்கவில்லை. பின்னர் சமூக வலைதளங்களிலும் இந்த பாடல் கிண்டல் செய்யப் பட்டது. காரணம் ஐக்கிய தேசியக் கட்சிக் கலாசாரத்துடன் இப்பாடல் ஒத்துப்போகவில்லை.

லதா வல்பொல, ஜோதிபால, எம்.எஸ்., நிஹால் நெல்சன் பின்னர் ருகாந்த குணதிலக்க போன்ற ஐ.தே.க பாடகர்கள் அந்தக் கட்சியின் கலாசாரத்திற்கு ஏற்ற பிரபலமான கலாசாரப் பாடல்களைப் பாடினர். டட்லி, ஜே.ஆர். மேலும் பிரேமதாச இந்தக் கலாச்சாரத்தை நன்றாக புரிந்துகொண்டவர்கள். அவர்களில் ரணசிங்க பிரேமதாசவே ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் அந்தக் கட்சிக்கான கலாசாரத்தைப் பிரபலமாக்கியவர். பிரபல பாடகர்களுக்கு பாடல்கள் எழுதினார். விக்டர் ரத்நாயக்க பிரபலமான ஐதேக கலாசாரத்தில் பிரபலமான பாடகர் ஆவார். விக்டர் ரத்நாயக்கவின் 'அபி ஒக்கோகம ராஜாவாரு' பாடலை 'கம் உடவா' நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி ஜே.ஆர். மீண்டும் மீண்டும் கேட்டார். அந்தக் கோரிக்கைகள் எலினா ஜெயவர்த்தனவிடம் இருந்து விக்டருக்குக் கிடைத்து வந்தன.

பிரேமதாச லதாவை பிரபலமான ஐதேக கலாசாரத்தின் பிரபலமான கலைஞராக்கினார். அவர், அரசியல் பாடல்களைப் பாட லதாவை அழைக்கவில்லை. ஆனால் அவர் லதாவின் பாடல்களை ஐதேக மேடைகளில் மிகவும் பிரபலமான பாடல்களாக்கினார். 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல், 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 1982 ஆம் ஆண்டு வாக்கெடுப்பு ஆகியவற்றில் இந்தப் பாடகர்கள் ஐ.தே.க. மேடைகளில் பாடினார்கள். பிரேமதாச அனைவருக்கும் வீடுகளை வழங்கினார். பாடகர் ஜோதிபால பிரேமதாசா மற்றும் விஜய குமாரதுங்க இருவருக்கும் நல்ல நண்பராக இருந்தார். 1977 பொதுத் தேர்தலில், விஜய குமாரதுங்க, கட்டான தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டார். கட்டான ஐதேக மேடைகளில் பாட ஜோதிபாலவை ஐதேக அழைத்தது, ஆனால் ஜோதிபால தனது நண்பர் விஜயாவை சந்தித்து அவரைத் தோற்கடிக்க ஐதேக மேடையில் பாடமாட்டேன் என்று கூறினார்.

ஜோதிபால பிரேமதாசவின் கமுதவ மேடையில் பிரபலமான மற்றும் விருப்பத்துக்குரிய பாடகராக இருந்தார். அந்த நாட்களில் ஜோதிபால ரூபவாஹினி நிகழ்ச்சிகளில் இடம்பெறுவதில்லை. ஜோதியைப் புறக்கணிக்கக் காரணம், அவர் மூன்றாம் தர (பீச்சிங்) பாடகர் என்று முத்திரை குத்தப்பட்டதே, அதற்குக் காரணம் பிரேமதாசாவுக்கும் ஜோதிபாலாவுக்கும் இடையே இருந்த அரசியல் நட்பும்தான். ஜோதிபாலாவின் இறுதிச் சடங்கில் லதா கலந்துகொள்ள ஜோதிபாலாவின் குடும்பத்தினர் தடை விதித்தனர். ஜோதியின் கடைசித் தருணங்களில் கலந்து கொள்ள முடியாமல் லதா கண்ணீர் விட்டு அழுதார். இதை அப்போதைய பிரதமர் பிரேமதாசா கேட்டிருந்தார். லதாவை தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு ஜோதிபாலாவின் இறுதிச் சடங்கிற்கு அழைத்துச் சென்றார். பிரேமதாசவுடன் லதா வருவதைக் கண்ட பின்னர் ஜோதிபாலவின் குடும்பத்தினர் அமைதியானார்கள்.

1988 ஜனாதிபதித் தேர்தலில், லதாவும் மற்றவர்களும் ஐதேக மேடைகளில் ஏறியதற்காக ஜே.வி.பியின் கொலை அச்சுறுத்தல்களுக்கு உள்ளானார். அப்போது இலங்கையில் நந்தமலானியின் 'பவானா' அலை வீசியது. லதா ஐக்கிய தேசியக் கட்சியுடன் நெருங்கிப் பழகிய வேளையில் நந்தமலானி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நெருக்கமாகிவிட்டார். 1980இல், ஜே.ஆரின் ஆட்சி திருமதி பண்டாரநாயக்காவின் குடியுரிமைகளை இல்லாதொழிக்க முடிவு செய்தது. திருமதி பண்டாரநாயக்கவின் குடிஉரிமைகள் நீக்கப்படுவதற்கு எதிராக பௌத்த தலைவர்கள் மற்றும் கலைஞர்களின் மனுவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கையொப்பமிட்டது, கையெழுத்திட்டவர்களில் அமரதேவ மற்றும் நந்தமலானி ஆகியோரும் அடங்குவர்.

இந்திய–இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, ஜே.வி.பி கிளர்ச்சி தொடங்கிய பிறகு, 'ஜே. ஆரைக் கொல்வோம்' என்று சுவர்களில் எழுதிய நந்தமலானியின் பாடல்கள் வெளிவந்தன. ஜே.ஆரின் ஆட்சிக்கு எதிராக பவானா மூலம் நந்தா அலையை உருவாக்கினார். அப்போது ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் கூட்டத்திற்கு முன்பே நந்தாவின் 'பவானா' பாடல்கள் மக்களை திரட்டத் தொடங்கின. 1988 இல் பிரேமதாச ஜனாதிபதியான பின்னர், ஜே.வி.பி. ஒடுக்கப்பட்டபோது, நந்தாவும், 'பவானா' பாடல்களை இயற்றிய பேராசிரியர் சுனில் ஆரியரத்னவும், அடக்குமுறைகள் தம்மைத் தொடரும் என்று பயந்து தென்னிந்தியாவிற்கு ஓடிவிட்டனர். அடக்குமுறை உச்சத்தை அடைந்த பிறகு, நந்தாவும் சுனிலும் இலங்கைக்குத் திரும்பினர். 'வனிதா வித்தி' விருது வழங்கும் விழாவில், அப்போதைய முதல் பெண்மணி ஹேமா பிரேமதாஸவினால் சிறந்த பாடகிக்கான விருது நந்தாவுக்கு வழங்கப்பட்டது.

ஒருமுறை பிரேமதாச, சுனில் ஆரியரத்ன எழுதிய 'சரு பாச திலே' பாடலின் வரிகளை பொதுக்கூட்டத்தில் மக்களின் சோம்பேறித்தனத்தைப் பற்றிப் பேசுவதற்குப் பாடினார். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்குப் பிறகு, நந்தா மற்றும் சுனில் ஆகியோர் 'சுகிரிபதிலனின் பாடல்களின் தொகுப்பை' வெளியிட்டனர், இது ஐ.தே.கவின் திறந்த பொருளாதாரக் கொள்கையை இரக்கமின்றி விமர்சித்தது. 1994இல், 17 வருடங்களுக்குப் பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது, ஆனால் நந்தா தேர்தல் மேடைக்குச் செல்லவில்லை. இருப்பினும் 1994 முதல் இன்று வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேடைகளில் நந்தாவின் பாடல்கள் கேட்கப்படுகின்றன.

1994 இல் ஐ.தே.க. எதிர்க்கட்சியான பின்னர், 1999 இல் நடந்த மாகாண சபைத் தேர்தலில் லதா மீண்டும் ஐ.தே.க. மேடைக்குத் திரும்பினார். 1999 மேல் மாகாண சபைத் தேர்தலில், மேல் மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளர் கரு ஜயசூரிய மேடைக்கு வருவதற்கு முன்னர் லதாவின் 'மனரஞ்சன தர்னேிய லங்கா' பாடல் புகழ்பெற்றிருந்தது. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அந்தப் பாடலைக் கேட்டார், ஆனால் ரணிலுக்கு லதாவைப் பிடிக்கவில்லை. அவர் தனது இளைஞர் விவகார அமைச்சில் இருந்து முன்னுக்கு வந்த ருகாந்த குணதிலக்கவைப் பாட வைக்க விரும்பினார். ஒருமுறை கொஸ்கஸ் சந்தியில் நடைபெற்ற கூட்டத்தில் லதாவின் பாடலை நிறுத்துமாறு ரணில் மிரட்டினார். கரு ஜயசூரிய தலையிட்டு லதாவிடம் விடயங்களை விளக்கினார்.

லதா ஐதேக கலாச்சாரத்தின் அடையாளம். ரணிலுக்கு அது புரியவில்லை. ஆனால் கரு ஜய சூரிய, பின்னர் ஐதேக பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் புரிந்துகொண்டனர். இன்றும் லதாவின் பிறந்த நாளை சஜித் மறக்கவில்லை. அவர் ஒரு பூங்கொத்தை எடுத்துக்கொண்டு லதாவின் வீட்டிற்குச் சென்று லதாவுடன் பாடுகிறார்.

லதா அரசியல் பாடல்கள் பாடியதில்லை. ஆனால் நந்தா அரசியல் பாடல்களைப் பாடி சுதந்திரக்கட்சி மற்றும் ஜேவிபியின் பிரபலமான நட்சத்திரமானார். லதாவும் நந்தாவும் அரசியல் செய்ததில்லை. ஆனால் நந்தாவுக்கு அரசியல் பாடல்கள் எழுதிய சுனில் ஆரியரத்ன அரசியல் செய்தார். 2002இல் ரணில் ஆட்சிக்கு எதிராக பல்கலைக்கழக பேராசிரியர்கள் நடத்திய போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்களில் சுனில் ஆரியரத்னவும் ஒருவர். 2005 ஜனாதிபதி தேர்தலின்போது மஹிந்தவை துடுகைமுனுவுடன் ஒப்பிட்டு உரை நிகழ்த்தினார். அந்தப் பேச்சு மஹிந்த சிந்தனையை பிரபலப்படுத்த பெரும் பலமாக இருந்தது. மேலும் 2017ஆம் ஆண்டு புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் சுனில் ஆரியரத்ன மத்திய வங்கிப்பிணை முறி மோசடி தொடர்பில் ரணிலை மறைமுகமாக விமர்சித்தார்.

இந்தக் காரணங்களாலோ என்னவோ சுனில் ஆரியரத்ன சுந்தர்யா பல்கலைக்கழகத்தின் வேந்தராக, ராஜபக்களிடம் இருந்து ரணில் ஜனாதிபதிப் பதவியைப் பெற்ற பின்னர் நியமிக்கப்பட்டார். சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி விருது வழங்கும் விழாவில், ரணில் நந்த மலானியை அணுகி விருதுகளை வழங்கிப் பாராட்டினார்.

ரணில் 30 வருடங்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்தார், அவர் ஐக்கிய தேசியக் கட்சியையோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சியின் கலாச்சாரத்தையோ விரும்பும் தலைவர் அல்லர். இதன் காரணமாக பிரபல நட்சத்திரங்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறியுள்ளனர். காமினி, ஜோ அபேவிக்ரம, மாலனி, ரவீந்திரன் ஆகியோர் அவர்களில் அடங்குவர். ரணில் அலட்சியமாக இருந்த போதிலும் லதா போன்ற பாடகி ஐ.தே.கவை விட்டு வெளியேறவில்லை.

2002 டிசெம்பரில், ரணில் பிரதமராக இருந்தபோது, லதா தனது 70வது பிறந்தநாளில் 'ரஜின மம்மை' கச்சேரி நடத்தினார். பிரதமர் ரணில் அழைக்கப்பட்டும் அவர் பங்கேற்கவில்லை. இதில் கரு ஜயசூரிய கலந்துகொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் கலைஞர்கள், விளை யாட்டு வீரர்கள், புத்திஜீவிகள் கட்சிக்காகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்காகவும் நிற்கும் அவர்கள் எப்படியும் ஐ.தே.க.வில் இருப்பவர்கள்தான் என்பதால் அவர்களுக்கு விசேட கவனிப்புத் தேவையில்லை என ரணில் நினைக்கிறார். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி எப்படியும் வென்றுவிடும், இவர்கள் எல்லாம் எதிர்ப்பு சக்திகள் என்று நினைக்கிறார். அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியை கடுமையாகத் தாக்கிய பிரேமசிறி கேமதாசவின் இசை நிகழ்ச்சிக்கு சென்ற அவர் லதாவின் கச்சேரியைப் புறக்கணித்தார். ஆனால் கேமதாசல ஐக்கிய தேசியக் கட்சிக்கு வரவே இல்லை. ரணில் ஐதேக என்ற வார்ப்புக்கு ஏற்ற தலைவர் அல்லர். அப்படிப் பார்க்கும் போது, வரலாறு அவருக்கு சரியான வழியில்தான் ஜனாதிபதிப் பதவியை வழங்கியிருக்கிறது.

# மலையக அரசியல்வாதிகள் விமர்சனங்களை விடுத்து மலையகத்தை அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்

## இராமேஸ்வரன் அழைப்பு



மலையக அரசியல் கட்சிகளைக் குறை கூறுவதையும் விமர்சிப்பதையும் விட்டு விட்டு, ஜனாதிபதியுடன் இணைந்து மலையக பிரதேசங்களை அபிவிருத்திசெய்ய முன்வர வேண்டும்.

அதுடன் மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதற்காக 400 கோடி ரூபா ஒதுக்கியமைக்கு நன்றி தெரிவிக்கிறோம் என எம். ராமேஷ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

மலையக மக்கள் இந்தியாவில் இருந்து வந்து 200 வருடங்கள் ஆகியும் அவர்களுக்குக் காணி, வீட்டு உரிமை இல்லை. என்றாலும் மலையகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அவ்வப்போது ஆட்சிக்கு வரும் அரசாங்கத்துடன் இணைந்து எமது கட்சித் தலைவர்கள் மேற்கொண்டு வந்துள்ளனர்.

தற்போது ஜனாதிபதி மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதற்காக 400 கோடி ரூபா ஒதுக்கி இருக்கிறார். இதற்காக எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் நாம் மலையகம் என நிகழ்வை கொழும்பில் நடத்தினோம். அதில் கலந்துகொண்ட வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் மலையக மக்களுக்குப் பல்வேறுவாக்குறுதிகளைவழங்கியிருந்தனர்.

ஆனால் இந்த நிகழ்வையும் சிலர் விமர்சித்துவருகின்றனர். ஆனால் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அந்தநிகழ்வுக்கு ஜனாதிபதியை அழைத்து, மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி உறுதிமொழியை வழங்கவேண்டு எனக் கேட்டுக்கொண்டிருந்தார். அவ்வாறே ஜனாதிபதியும் அந்த உறுதியை அந்தநிகழ்வில் வழங்கினார். தற்போது அதற்காக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் மலையக அபிவிருத்திக்காக கடந்த முறைகளைவிட அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இதனையும் சிலர் விமர்சனம் செய்கின்றனர். இவ்வாறு விமர்சனம் செய்தே மலையக மக்களின் எதிர்காலத்தை இல்லாமலாக்க சிலர் முனைகின்றனர். எம்மைப் பொறுத்தவரை ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துடன் கலந்துரையாடி மலையக மக்களுக்கு என்ன தேவையோ அதனையே நாங்கள செய்து வந்திருக்கிறோம்.

ஆனால் தொண்டமான்கள் பல வருடங்கள் மலையகத்தை ஆடசி செய்துள்ள போதும் மலையக மக்களுக்கு எந்தவித காணி உரிமையையும் பெற்றுக்கொடுக்கவில்லை. நானே மலையக மக்களுக்கு 10 பேர்ச் காணி உரிமையை பெற்றுக்கொடுத்தாக ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

உண்மையில் அரச காணியை வாங்கித் தனியாருக்குக் கொடுத்து, தனியார் நிறுவனம் மலையக மக்களை அங்கே நுழையவிடாததால், குறித்த தனியார் நிறுவனத்துடன் கலந்துரையாடியே 8 பேர்ச் காணி பெற்றுக்கொடுக்கப்பட்டது, மாறாக, மலையகத்தில் எங்கேயும் 10 பேர்ச் காணி கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்போது தான் மலையத்தில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி 10 பேச் காணி வழங்குவதாக உறுதி வழங்கி இருக்கிறார். அத்துடன் மலையக மக்களுக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிக வீடுகள் தேவையாக இருக்கிறன்றன. அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் 1000 வீடுகளையே நிர்மாணிக்கின்றது. அதன் பிரகாரம் மலையகத்துக்குத் தேவையான வீடுகளை பெற்றுக்கொள்ள பல வருட காலம் செல்லும். அதனால் 10 பேச் காணி உரிமையை பெற்றுக்கொள்வதன் மூலம் அந்த மக்களுக்கு அவர்களுக்கே வீடுகளை கட்டிக்கொள்ள முடியுமாகிறது. அதேபோன்று கல்வி அபிருத்திக்குத் தேவையான நிதியையும் ஜனாதிபதி ஒதுக்கி இருக்கிறார். அதனால் மலையக அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் குறை கூறுவதையும் விமர்சிப்பதையும் விட்டு, ஜனாதிபதியுடன் இணைந்து மலையக பிரதேசங்களை அபிவிருத்திசெய்ய முன்வர வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம். அதனால்தான் நாங்கள் ஜனாதிபதிக்கு எமது ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம். எதிர்காலத்திலும் ஜனாதிபதிக்கு எமது முழுமையான ஒதுழைப்பை வழங்கி மலையக மக்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம். - என்றார். (05)

# 2 மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் ஒருவர் இறப்பு

கொஸ்கொடை பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட காலி - கொழும்பு பிரதான வீதியில் காலி பிரதேசத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் திரும்பி மீண்டும் காலி நோக்கி செல்லும் போது கொழும்பிலிருந்து காலி நோக்கி பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் பலபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கராபிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தியகம கல்பாத்த பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய நபர் ஆவார்.

விபத்தில் காயமடைந்த மற்றொரு மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் பெந்தர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக களுத்துறை நாகொடை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளை கொஸ்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# முதலாவது திருமணம் ஆகாத அழகு ராணியாக தமிழ் பெண்











இலங்கையின் முதலாவது திருமணமாகாத அழகு ராணியாக காரைதீவைச் சேர்ந்த பெண்ணொருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த நிவேதிகா இராசையா என்ற பெண்ணே மிஸ் யுனிவர்ஸ் தமிழ் 2023 பட்டம் வென்றுள்ளார்.

மேலும் பட்டம் வென்ற இவருக்கு சுமார் 350,000 ரூபா பரிசுத்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. (05)

# ஒரு வருடத்தில் நாட்டில் விபத்துகளால் 10-12 ஆயிரம் பேர் வரையானோர் சாவு

இலங்கையில் வருடத்துக்கு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் வரையானோர் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இவ்வாறுவிபத்துகளில்சிக்கியஒரு மில்லியன்பேர்வைத்தியசாலைகளில் தொடர்ந்தும்சிகிச்சைபெற்றுகின்றனர் எனவும் நாளாந்தம் கிட்டத்தட்ட 35 பேர் வரை விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் எனவும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட விபத்துக்களை கட்டுப்படுத்துதல் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விபத்துக்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான மாநாடு நவம்பர் 20 ஆம் திகதி முதல் நவம்பர் 21 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

நாட்டில் நிலவும் விபத்துக்களை கட்டுப்படுத்துவதோடு நாட்டில் மருத்துவ சிகிச்சை முறைகளையும் வலுப்படுத்துவது அத்தியாவசியமாகும் என அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், மக்களுக்கு விழிப் புணர்வு வழங்குவதங்கான திட்டங்கள், பாதுகாப்பான சூழலை உருவாக்குதல் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (05)

# காட்டெருமை தாக்கி வயோதிபர் படுகாயம்

நுவரெலியா, கந்தப்பளை - ஹைபொரஸ்ட் இலக்கம் மூன்றாம்பிரிவில்காட்டெருமை தாக்கி 84 வயதான வயோதிபர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் ஹைபொரஸ்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காட்டெருமை தாக்குதலுக்கு இலக்கானவர் ஹைபொரஸ் இலக்கம் மூன்றாம் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த முனியன் கங்காணி என்பவராவார்.

ஹைபொரஸ்ட் மூன்றாம் பிரிவில் பிங்கந்தலாவை பகுதியிலிருந்து காட்டெருமை ஒன்று நகருக்கு திடீரென வந்துள்ளது.

அந்த காட்டொருமையை விரட்டியடிக்க நகரில் சிலர் முற்பட்டுள்ளனர். இதன்போது குறித்த வயோதிபர் காட்டெருமையின்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

குறிப்பாக கந்தப்பளை ஹைபொரஸ்ட் வனப்பகுதியில் காட்டெருமை, காட்டுபன்றி உள்ளிட்ட வனவிலங்குகள் அதிகமாக வசித்து வருகின்றன. இவை அடிக்கடி உணவு மற்றும் தண்ணீர் தேடி பிரதான நகர் பகுதிகளுக்குள் புகுந்து விடுகின்றன இந்த காட்டெருமை கூட்டம் நகர்பகுதியில் உலா வருவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். (05)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## மாவீரர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளதமிழர்களால் மாவீரர் வாரம் கார்த்திகை 21 நாளான நேற்று தொடங்கப்பட்டது. இதனையொட்டி நல்லூரிலுள்ள தியாகி திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக மாவீரர்கள் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. தற்காலிகப் பந்தலில் தொடங்கப்பட்டுள்ள இந்த நினைவாலயம் மாவீரர் நாள் வரையில் அங்கிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாலை 6 மணியளவில் இந்த நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது. வடக்குமாகாணமுன்னாள் முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் வி.மணிவண்ணன், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நினைவாலயத் திறப்பு நிகழ்வில் பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி ஏற்றிவைத்து மலரஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ச்சியாக சிறுவர் சிறுமியர்களால் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் திரைநீக்கம் செய்யபட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்கபெற்ற 24,379 பேரின் பெயர்களினை இந்த மாவீரர் கல்வெட்டுக்கள் தாங்கியிருப்பதாக இதற்ஏற்பாட்டாளர்களில் ஒருவரான யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தெரிவித்தார்.

மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகள், சிறுவர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவ ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் அபிவி ருத்திக்கு தேவையானமுழுஒத்துழைப்பையும் வழங்குவதாக எரிக் சொல்ஹெய்ம் உறுதிய ளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வட மாகாணத்தின்இடர்முகாமைத்துவம், மக்களின் அன்றாட வாழ்வியல் நிலை, காலநிலை, பொருளாதாரம், மாகாணத் தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கௌரவ ஆளுநரால் இதன்போது சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டதாகவும் ஆளுநர் அலுவலகத் தகவல்கள் கூறின. விடயங்களைகேட்டறிந்துக்கொண்ட ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், தனதுஇலங்கைப்பயணத்தின்போது, வடக்குமாகாண ஆளுநரை முதலில் சந்திக்க கிடைத்தமையையிட்டுத் தாம் பெருமகிழ்ச்சி அடைகிறார் என்று கூறினார்.

இலங்கையின் வளர்ச்சிக்கான பசுமைத் திட்டங்களை முன்னெடுப்பதில் தாம் மகிழ்ச்சியடைகிறார் என்றுதெரிவித்தஎரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். சூரிய, காற்றாலை, நீர்மின்உற்பத்திக்கானவளங்களை இலங்கை கொண்டுள்ளமையால், பச்சை ஹைட்ரஜன் (green hydrogen) திட்டத்தை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.



# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வை நீண்ட காலத்திற்கு முன்னெடுக்க வேண்டிவரும்

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு




கொக்குத்தொடுவாயில் வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சில வேளை மனித எச்சங்கள் இருக்கக் கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளும‌ன்ற உறுப்பினருமாகிய எம் .ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்கும் இடத்தைப் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி மீளவும் திங்கட்கிழமை காலை ஆரம்பமாகி இருக்கின்றது.

தற்போது விடுவிக்கப்பட்டிருக்கின்ற நிதியை வைத்து இன்னும் இரண்டு வாரங்களுக்கு அகழ்வை மேற்கொள்ள முடியும் எனக் கூறியிருக்கிறார்கள்.

இது பல்வேறு தளங்களிலே உடல்கள் காணப்படுகின்ற காரணத்தாலே நீண்ட காலமாக இதனைச் செய்வதற்கான தேவை ஏற்பட்டிருப்பதைத் தற்போது உணர்ந்திருக்கின்றார்கள்.

அது ஒரு பக்கம் இருக்க வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சில வேளை மனித எச்சங்கள் இருக்கக்கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகையினாலே இதனை வருகின்ற நாள்களிலே பரிசீலித்து நீண்ட நாள்களாக செய்யப்பட வேண்டிய செயன்முறை என்ற அடிப்படையிலே அதற்கான நிதியை ஜனாதிபதி செயலகத்திலே இருந்து, அரசாங்க அதிபருக்கு அதனை விடுவிப்பதற்கான முயற்சிகள் இன்றிலிருந்து (கடந்த திங்கட்கிழமை) ஆரம்பமாக இருப்பதாகவும் அந்த நிதி விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஆகையினாலே இந்த செயற்பாடுகள் தற்போது சரியான முறையிலே நடைபெறுகின்றன.

ஒவ்வொரு உடல்களும் கை, கால், உடம்பு, தலை அனைத்தும் பொருந்தக்கூடிய வண்ணமாக எடுக்கப்படுகின்ற காரணத்தால்தான் நீண்ட நேரம் இதற்கு செல்வாகின்றது. உடையாமல்கவனமாகஎடுக்கப்படவேண்டிய தேவையும் இருக்கின்றது.

ஆகையினால் ஒவ்வொரு கட்டமாக அகழ்ந்து தற்போது 17 உடலங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை விட கூடுதலான எண்ணிக்கை இருக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அவர்களுடைய சீருடைகள் மற்றும் வேறு பல பொருள்களும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

ஆகையினாலே எந்த காலத்தில் நிகழ்ந்திருக்கலாம்என்பதையும்சிலபரிசோதனைகளின் பின்னர் அறியக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு சில நாள்கள் எடுக்கும் என மேலும் தெரிவித்தார். (05)

## தீயால் வீடுகளை இழந்த இராகலை மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டம்




இராகலை மத்திய பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் தமக்கான வீட்டு உரிமையைக் கோரி இராகலை நகரில் வீதிக்கு இறங்கி அமைதிபேரணியுடன்போராட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர். இராகலை மத்திய பிரிவு தோட்டத்தில் கடந்த 05.07.2023 அன்று 20 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பு திடீர் தீ விபத்துக் குள்ளாகி முற்றாக எறிந்து சேதமடைந்தது.

இந்தத் தீ விபத்து சம்பவத்தில் 20 வீடுகளில் 18 வீடுகள் முற்றாக எறிந்ததுடன் இதில் வசித்து வந்த 18 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் நிர்கதிக்கு ஆளாகி இந்தத் தோட்டத்தில் செயலிழந்துள்ள தோட்ட வைத்தியசாலை கட்டடத்தில் அடிப்படை வசதி குறைப்பாடுகளுடன் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இவ்வாறு தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது தொடர்பில் எத்தகைய முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் தோட்ட நிர்வாகம் மற்றும் அமைச்சர்கள் எடுத்ததாகத் தெரியவில்லை.

இருப்பினும் தீக்கிரையாகி முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளலயன் குடியிறுப்புக்களை திருத்தி பாதிக்கப்பட்டுள்ள மக்களை அதில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் இந்த நடவடிக்கையை எதிர்த்துள்ள மக்கள் தங்களுக்கு பாதுகாப்பான இடத்தில் தனி வீடுகளை அமைத்து அதில் குடியமர்த்த அரசாங்கம் மற்றும் இன்றைய ஆட்சியில் உள்ள தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்துள்ளனர். இதற்கான அழுத்தத்தை கொடுக்கும் வகையில் கடந்த மூன்று மாத காலமாகப் பொறுமை காத்த பாதிக்கப்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் பதாதைகளை ஏந்தி இராகலை நகரில் அமைதி போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இவ்வாறு அமைதி பேரணியில் ஈடுபட்ட பாதிக்கப்பட்ட மக்கள் இராகலை நகரில் மத்திய தபால் அலுவலகத்துக்கு முன் பிரதான வீதி ஓரத்தில் ஒன்று கூடி அமைதியாகப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தநியாயமானஉரிமையை கேட்டு அமைதி போராட்டத்தில் ஈடுபட்ட பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மத குருக்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் போராட்டத்தில்பங்கேற்றிருந்தனர். (05)

## மது போதையில் வாகனம் செலுத்திய கணவரை கைதுசெய்யமுயன்ற பொலிஸை தாக்கிய மனைவி

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் மது போதையில் பயணித்த சாரதி ஒருவரை கைதுசெய்ய முற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் கழுத்து மற்றும் கைகளை சாரதியின் மனைவி நகங்களால் கீறிகாயப்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பொலிஸ்உத்தியோகத்தர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்றார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சாரதி மற்றும் அவரது மனைவி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மல்வான வல்கம பிரதேசத்தை சேர்ந்த தம்பதிகளாவர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாளிகாவத்தை பொலி-ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## வீதியில் காணப்பட்ட நீரில் வழுக்கி சுரங்கப் பாதையில் மோதிய லொறி



மீரிகமவிலிருந்து தலவாக்கலை அக்கரபத்தனைநோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியொன்று வீதியில் மழை நீரில் வழுக்கி சுரங்கப் பாதையில் மோதியுள்ளதாக திம்புல பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன்-நுவரெலியாபிரதானவீதியில் கொட்டகலை சுரங்கப்பாதைக்கு அருகில்இந்தவிபத்துஇடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் பெய்த மழையின்போது சென்றுகொண்டிருந்த லொறி, மழை நீரில் வழுக்கி சுரங்கப்பாதையில் மோதி நின்றதாகவும், விபத்தில்எவருக்கும்காயம்ஏற்படவில்லை எனவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் திம்புல பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். (05)

## பொலிஸ் உத்தியோகத்தர் கடமைக்கு இடையூறு உள்ளூராட்சி சபை முன்னாள் தலிசாளர் கைது

*வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெப்பட்டிபொல பிரதேசத்தில் கடமையில் இருந்த இரு போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையாற்றவிடாமல் இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் வெலிமடை உள்ளூராட்சி சபையின் முன்னாள் தலைவர் ஒருவர் வெலிமடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கடந்த ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்தின் பின்னர் தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் வெலிமடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*கைதுசெய்யப்பட்டவர்கெப்பட்டிபொல பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய வெலிமடை உள்ளூராட்சி சபையின் முன்னாள் தலைராவார்.*

*சந்தேக நபர் வெலிமடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.*

*இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிமடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

## ஐஸ் போதையுடன் இளைஞர் கைது

தலங்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் பன்னிப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடைய இளைஞராவார்.

தலங்கம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 600 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## விபத்துக்குள்ளாகி இறந்த ஆணின் சடலம் மீட்பு

தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கம்பொல - கண்டி பிரதான வீதியில் பிடவலவத்த பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகி இறந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் தொடர்பான தகவல் இதுவரை கண்டறியப்படவில்லை.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய வாகன சாரதி தலைமறைவாகியுள்ளார் என பொலிஸ-ார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

### காதல் உறவுகளால்

## பாலியல் துஸ்பிரயோகத்துக்குள்ளாகும் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

*காதல் உறவுகளால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் பதினாறு வயதுக்கு உட்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பெற்றோர் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.*

*இந்த வருடத்தின் கடந்த ஒன்பது மாதங்களில் மாத்திரம் 917 சிறுவர்கள் இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர்.*

*இதுகடந்த2022வருடத்துடன் ஒப்பிடும் போது அதிகரித்துக் காணப்படுகிறது.*

*இதேவேளை, கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 425 ஆகும்.*

*கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது அதிகரிப்பையே காட்டுவதாகவும் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது. (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# சிறுவர்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதால் விரைவில் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள்

## ஐ.நா. சிறுவர் நிதிய இலங்கைக்கான பிரதிநிதி கருத்து

சுற்றுச்சூழல் பேரழிவுகள் உள்ளிட்ட ஆபத்துக்களால் சிறுவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதால் விரைவான வேகத்தில் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டின் ஸ்கூக் மேலும் கூறுகையில் -

சிறுவர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் ஆண்டுநிறைவு 34 வருடங்களுக்கு முன்னர் 1989 நவம்பர் 20ஆம் திகதி உலகத் தலைவர்கள் அனைவரும் உலகில் உள்ள சிறுவர்களின் ஒற்றுமைக்கான அருமையான தருணத்தில் ஒன்றிணைந்தனர்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயமானது ஒவ்வொரு சிறுவரினதும் உரிமைகளைப் பாதுகாக்கவும், நிறைவுசெய்வதற்குமான உறுதிப்பாடாக ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளது.

சிறுவர் பராயம் என்பது 16 அல்லது 18 வயதுக்குக் குறைந்தவர்கள் என்பது வாழ்க்கையில் பௌதீக வளர்ச்சி, விளையாட்டு, கற்றல் மற்றும் உளரீதியான முன்னேற்றம் என்பவற்றுக்கான விசேட தருணம் என சமவாயம் அங்கீகரிக்கிறது.

மனித உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களின் வரலாற்றில் இந்த சமவாயமே மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டதொன்று என்பதுடன், இது பல ஆண்டுகளாக உலகம் முழுவதிலும் சிறுவர்களின் உரிமைகைளை மாற்றியமைத்தது.

1990 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட முதல் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும் என்பதுடன், 1991ஆம் ஆண்டு இதற்கு இலங்கை ஒப்புதல் வழங்கி இதை நடைமுறைப்படுத்தவும், பொறுப்புக் கூறுவதற்கும் அர்ப்பணிப்பைத் தெரிவித்தது.

அன்றிலிருந்து இலங்கை உலகளாவிய தடுப்பூசியேற்றலைப் பேணிவருதல், ஆரம்பக் கல்விக்கான உலகளாவிய அணுகலை அடைதல் -99 விகிதம், பிறக்கும் குழந்தைகள் தமது ஐந்தாவது வயது பிறந்த நாளுக்கு முன்னர் இறக்கும் நிலைமையைக் குறைந்த மட்டத்தில் பேணுதல் - 1000 பிறப்புக்களில் 11, பாதுகாப்பான குடிநீருக்கான அணுகலை 88.5 வீதம் ஆக நிலைக்கச்செய்தல் போன்ற விடயங்கள் உள்ளிட்ட சிறுவர்களின் உரிமைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதி, சுனாமி, கொவிட்-19 மற்றும் அண்மைய பொருளாதார நெருக்கடி போன்ற காலகட்டங்கள் உள்ளடங்கலாக சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இலங்கை அடைந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களில் இவை சிலவாகும்.

இந்த முன்னேற்றத்தை நாம் கொண்டாடும் அதேநேரம், நாம் இன்னமும் முன்னெடுக்க வேண்டிய எஞ்சியுள்ள வேலைகளையும் சிறுவர் உரிமைகளுக்கான சமவாயத்தின் ஆண்டு நிறைவானது நினைவுபடுத்துகிறது.

குறிப்பாக அண்மைய இலங்கையின் பல்பரிமாண வறுமைச் சுட்டெண்ணுக்கு அமைய 5 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பத்துப் பேரிலும் நான்கிற்கும் அதிகமானவர்கள் (42.2 விகிதம்) சுகாதாரம், கல்வி, அத்தியாவசியமான வாழ்க்கைத்தரம் அல்லது ஆரம்ப குழந்தைப் பருவ வளர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புபட்ட இரண்டு அல்லது அதற்கும் மேலான அடிப்படை உரிமைகளை இழந்து அல்லது இவை இழக்கப்பட்ட வீடுகளில் வசிக்கின்றனர்.

2021 - 2022 காலப்பகுதியில் கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய மட்டத்திலான கணக்கெடுப்புக்கு அமைய தரம் 3 மாணவர்களில் 14 வீதம் மட்டுமே கல்வியறிவில் அனைத்து அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளையும் அடைந்துள்ளனர். எண்ணறிவு 15 வீதம் ஆயினும்கூட, இந்தத் தேர்ச்சிகள் குழந்தைகள் தங்கள் அறிவையும் எதிர்காலத்திற்கான பல்வேறு திறன்களையும் உருவாக்க அடித்தளமாக அமைகின்றன.

இலங்கை முழுவதிலும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு நிலையங்களிலும், தடுப்புக் காவல் நிலையங்களிலும், தரம்குறைவான வாழ்க்கை நிலைமைகளில் முழு அபிவிருத்தியை அடைய முடியாத நிலையில் உள்ளார்கள். இவர்களில் 90 வீதத்துக்கு மேற்பட்டவர்களுக்கு அவர்களுடைய குடும்பங்களிடம் போதிய ஆதரவை வழங்கி அனுப்பி வைக்க முடியும்.

16-17 வயதுடைய சிறுவர்கள் இன்னமும் சட்டத்தால் வயது-வந்தோர் என மதிக்கப்படுவதுடன், நீண்ட காலத்துக்கு அவர்கள் தடுத்துவைக்கப்படுகின்றனர்.

வீடுகள், பாடசாலைகள் மற்றும் சமூகத்தில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் சிறுவர்களைத் தொடர்ந்தும் துரத்துகின்றன. பொருளாதார நெருக்கடிகள் காரணமாக துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், அதேநேரம் இதற்குப் பதிலிறுக்கும் சேவைகளும் இடர்பாடுகளைக் கொண்டிருக்கின்றன.

சிறுவர்களின் உரிமைகளில் காணப்படும் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான முக்கிய கருவி அதற்காக ஒதுக்கப்படும் வளங்களாகும். எவ்வாறாயினும், கல்வி மற்றும் சுகாதார வரவு - செலவுத் திட்டங்கள் சர்வதேச அளவுகோல்களை விட மிகக் குறைவாகவே உள்ளன என்பதுடன், அவை அபிவிருத்தியைத் தக்கவைத்துத் துரிதப்படுத்த போதுமானதாக இல்லை.




மதிப்பீடுகளுக்கு அமைய, 2023ஆம் ஆண்டில் இலங்கை கல்விக்கு முழு அரசாங்க செலவீனத்தில் 7.2 வீதத்தை (15 முதல் 20 என்பதே சர்வதேச அளவு எல்லையாகும்) அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 வீதத்திற்குச் (சர்வதேச அளவு எல்லை 4 முதல் 6) சமமான அளவையே முதலீடு செய்துள்ளது.

2023 இல் சுகாதாரத்தில் அரசாங்கத்தின் ஒதுக்கீடானது மொத்த அரசாங்க செலவீனத்தில் 7.3 வீதம் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 வீதம் (உலக சுகாதாரப் பாதுகாப்பை அடைவதற்கு 5 வீதம் என்பது சர்வதேச அளவு எல்லையாகும்) என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எழுத்துக்கள் யாவும் சுவரில் காணப்படுகின்றன. குறிப்பாக சுற்றுச்சூழல் பேரழிவுகள் உள்ளிட்ட ஆபத்துக்களால் சிறுவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதால் விரைவான வேகத்தில் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. எனவே யுனிசெப் இதற்காக அழைப்பு விடுக்கிறது:

சிறுவர்களின் நிலைமைகள் மேலும் மோசமடைவதைத் தவிர்ப்பதற்கும், அண்மையில் ஏற்பட்ட அதிர்வுகளின் விளைவுகளிலிருந்து மீளெழுவதற்கும், அவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை மேம்படுத்துவதற்கும் வளர்ச்சியின் பாதையிலும் கொண்டு செல்வதற்கு சமூகத்துறைகள் தொடர்பான செலவீனங்களை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் அதிகரித்தல்.

உயர்ந்த வருவாயைப் பெற்றுக்கொள்ள இளம் சிறார்களில் இலங்கை வினைத்திறனாக செலவு செய்வதுடன், முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். சிறுவர் முன்னேற்றம் குறித்த ஆதாரங்கள் மற்றும் பொதுச் செலவீனங்கள் என்பன முதல் 1000 நாள்கள் உடல் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்க சிறந்த வாய்ப்புக்களை வழங்குகின்றன என்பது சிறுவர் முன்னேற்றம் குறித்த ஆதாரங்கள் மற்றும் வினைத்திறனை வழங்குவதற்கு முக்கியம் என்பது கடந்த வருடங்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கான நன்மை என்பது காட்சிகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் அளவிடக் கூடிய கொள்கையாகும். இது வறுமையைத் தடுப்பதுடன், சிறுவர்களின் ஆரோக்கியம், போசாக்கு மற்றும் கல்வியின் வெளிப்பாடு என்பவற்றுக்கு உதவுகிறது. கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான வவுச்சர்களை வழங்கு-வது போன்ற திட்டங்களின் மூலம் முன்னேற்றகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

மேலும் பொருளாதார முன்னேற்றத்துக்கு தற்பொழுது மனித மூலதன முன்னேற்றத்தின் பிரதான அடிப்படையாகக் காணப்படும் அடிப்படைக் கற்கைகளைப் பலப்படுத்துவதற்கு நாடு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 10 டொலர் முதல் 15 டொலர் வரையிலான சிறிய அளவிலான உதவிகள் மூலம் அனைத்து சிறுவர்களும் அவசியமான அடிப்படைத் திறன்களை உறுதிப்படுத்தக் கூடிய கல்வியைப் பலப்படுத்த முடியும் என்பதை ஆதாரங்கள் காண்பிக்கின்றன.

ஆரம்பக் கல்விக்கான விரிவான கற்றல் மீட்புத் திட்டத்துக்கான மூலோபாயத்தை (2023-2025) கல்வி அமைச்சு தயாரித்திருப்பதுடன், அனைத்து ஒன்பது மாகாணங்களும் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளன. இது வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாக இருந்தாலும் இவற்றுக்கான நிதியளிப்பு மற்றும் வினைத்திறனான நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு போதிய வளம் இருக்க வேண்டும் என்பதும் முக்கியமாகும்.

சிறுவர்களுக்கு எதிராக அனைத்து வகையிலான வன்மு-றைகளையும் கையாழுதல்: மாற்று பராமரிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தவும். இது ஒரு விரிவான மாற்று பராமரிப்பு விருப்பங்களைக் கோடிட்டுக் காட்டும் மாற்றுப் பராமரிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு யுனிசெப் வலியுறுத்துகிறது. முதன்மையாக அனைத்து சிறுவர்களுக்கும் குடும்ப தீர்வுகளைக் கண்டறிதல் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைகளை வழங்கும் அனைத்து முறையான கட்டமைப்புகளை சீர்திருத்த ஊக்குவிக்கிறது.

அனைத்து மட்டங்களிலும் உடல் ரீதியான தண்டனையைத் தடை செய்வதற்கும் அதனைக் குற்றமாக்கு-வதற்கும் அவசர நடவடிக்கைகளை எடுக்கவும் அதன் பயன்பாடு மற்றும் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் தெரிந்தாலும், இலங்கையில் உடல் ரீதியான தண்டனை சட்டத்திற்கு உட்பட்டது - பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒழுக்கம் மற்றும் திருத்தம் என்ற பெயரில் குழந்தைகள் மீது உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் வன்முறையில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசியல் உள்ளடங்கலாக மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயத்திலும் இறுதியாக சிறுவர்களின் உரிமைகள் தொடரப்பட வேண்டும். ஒவ்வொரு பிரைஜயும் சிறுவர்களின் உரிமைகளை நிலைநிறுத்தி, சிறுவர்களின் நலன்களின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தால் சிறுவர்களின் உரிமைகளை அடைய முடியும்.

சிறுவர் உரிமைகளை நிலைநிறுத்தி, சிறுவர்களின் நலன்களின் அடிப்படையில் முடிவுகளை மற்றும் செயல்களை எடுத்தால் மட்டுமே சிறுவர் உரிமைகளை அடைய முடியும். சிறுவர்களின் உரிமைகளை வெல்வதில் இலங்கை தனது திறமையை நிரூபித்துள்ளது. இதற்குத் தற்பொழுது ஒரு தெரிவு உள்ளது. செயலற்ற தன்மை அதில் ஒன்று அல்ல என மேலும் கூறினார். (05)

# புற்றுநோயாளர்களுக்கு தரமற்ற மருந்துகள்? விசாரணை மேற்கொள்ளுமாறு கோரிக்கை

*மோசடி மூலம் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட தரமற்ற மருந்துகளால் பாதிக்கப்பட்ட 2000 இற்கும் மேற்பட்ட புற்றுநோயாளர்களின் நிலைமைகள் குறித்து சுகாதார தொழில்வல்லுநர்கள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.*

*கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே சுகாதார தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர் -*

*'இம்யூனோகுளோபுலின் என்று நாங்கள் வழங்கிய மருந்து இம்யூனோகுளோபுலின் மருந்து அல்ல என மருந்தை உற்பத்தி செய்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.*

*கள்வர்களைப் பிடிக்க வேண்டும் என்று கள்வர்கள் பின்னால் ஓடிக்கொண்டுக்கும் போது இந்த மருந்தை எடுத்துக்கொண்ட மக்களின் நிலை குறித்து சிந்திக்க நாங்கள் மறந்து விடுகின்றோம்.*

*அவர்களின் ஆரோக்கியத்திற்கு பொறுப்பு கூறுவது யார்? அதேபோன்று ரிடுக்சிமெப் என்ற புற்றுநோய்க்கான மருந்தும் 2000 புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த மருந்தும் இம்யூனோகுளோபுலின் மருந்தைப் போன்று பதிவு செய்யப்படாமல் கொண்டு வரப்பட்ட மருந்து என்று உறுதியாகியுள்ளது.*

*இந்த மருந்தை உற்பத்தி செய்ததாக கூறப்படும்; நிறுவனம் தாங்கள் இவ்வாறான மருந்தை உற்பத்தி செய்வதில்லை என்று கூறியுள்ளது.*

*ஆகவே இந்த 2000 நோயாளர்களுக்கும் யார் பொறுப்புக் கூறுவது?' என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (05)*

# குற்றப் புலனாய்வுப் பிரிவு மீது சந்தேகம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு

இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மோசடி தொடர்பிலான குற்றப்புலனாய்வு பிரிவினரின் சோதனை நடவடிக்கைகள் குறித்து தமக்கு பாரிய சந்தேகம் எழுந்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மோசடி தொடர்பில் அரச மருத்துவ விநியோக பிரிவின் உயர்மட்ட அதிகாரிகள் நால்வர் திங்கட்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்டனர்.

மருத்துவ விநியோகப் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்கிரமநாயக்க, உதவிப் பணிப்பாளர் தேவசாந்த சாலமன், கணக்காளர் நேரன் தனஞ்சய மற்றும் பங்குக்கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றிய மருந்தாளர் சுஜித் குமார ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இந்தநிலையில் கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் திங்கட்கிழமை பிற்பகல் மாளிகாகந்த நீதிபதி லோச்சனா அபேவிக்ரம முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை மருத்துவ விநியோக பணிப்பாளர் வைத்தியர் கபில விக்ரமநாயக்கவின் அலுவலகத்தில் காணப்படும் ஆவணங்களை சோதனை செய்வதற்காக குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்வைத்த கோரிக்கைக்கும் நீதிபதி லோச்சனா அபேவிக்ரம அனுமதி வழங்கியிருந்தார். இந்தநிலையில் மருத்துவ விநியோக பணிப்பாளரின் அலுவலகத்தை சோதனையிடுவதற்காக குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் நேற்று கொழும்பில் அமைந்துள்ள குறித்த அலுவலகத்திற்கு சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வுபூர்வமாக மாவீரர் வார நிகழ்வு ஆரம்பம்





தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களைப் போற்றிவணங்கும்மாவீரர்நாள்இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ்மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த தமது உறவுகளை நினைந்து வருடம் தோறும் கார்த்திகை 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் அனுஷ்டிக்கப்படுவது வழமை அந்தவகையில் இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மேற்கொள்ள தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது.

அந்தவகையில் கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்படுவது வழமை. அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) உணர்வு பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் செலுத்தி மாவீரர்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டனர்.

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்தோடு 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தபோது இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்த கல்லறைகள் நினைவுக்கற்கள் மற்றும் வளாகம் முற்றாக இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த துயிலும் இல்லம் இராணுவத்தினிடம் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்று வருவதோடு இவ்வாண்டும் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற ஏற்ப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டு பிரமாண்டமான நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

(05)

## நீதிமன்ற தீர்ப்புக்குள்ளானவர்களால் பதுக்கப்பட்ட சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும்

### சந்திரிகா வலியுறுத்து



நாடுவங்குரோத்து நிலையை அடைந்துள்ளமை தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மிக முக்கியத்துவமுடையதாகும்.

குறித்த வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் உள்நாட்டில் மாத்திரமன்றி, வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அவற்றை மீட்டு அரசுடைமையாக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

காணொளியூடாக விசேட அறிவித்தலொன்றை விடுத்து இவ்வாறு வலியுறுத்தியுள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

நாட்டை வங்குரோத்துக் குள்ளாக்கியமை தொடர்பில் அண்மையில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தீர்க்கமானதாகும். நாட்டுக்காக இளம் தலைமுறையினர் எவ்வாறு சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதற்கு இது சிறந்த முன்னுதாரணமாகும்.

நீதிமன்றம் தண்டனை வழங்கவில்லை என்றபோதிலும், இவர்கள் நிச்சயம் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாவர்.

எவ்வாறிருப்பினும் இவர்களிடமிருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே நாட்டில் கொள்ளையடித்து வெள;வேறு நாடுகளிலும் இவர்கள் சேமித்து வைத்துள்ள பணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, அதே போன்று உள்நாட்டில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அவற்றை அரசுடைமையாக்கவும், மக்களுக்கு பகிர்ந்தளிக்கவும் முடியும்.

வரிகளை மேலும் மேலும் அதிகரித்து மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதை விட, இவர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை கையகப்படுத்தி அவற்றின் ஊடாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்திடம் யோசனையொன்றை முன்வைக்கின்றேன்.

உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

உடனடியாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன். அமைச்சரொருவர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தவறு என்று விமர்சித்துள்ளார். அதனை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். நீதிமன்றத்தின் தீர்ப்பை எவராலும் விமர்சிக்க முடியாது. -என்றார்.

(05)

## ரயிலிலிருந்து வீழ்ந்து மூளைச் சாவடைந்த பல்கலை மாணவன் உடலுறுப்புகள் தானம்



மூளைச்சாவடைந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் உடல் உறுப்புகளை தானமாகக் கொடுப்பதற்கு அவரது பெற்றோர் தீர்மானித்துள்ளனர்.

வெயாங்கொடை மாலிக தென்ன பகுதியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் உறுப்புகளே இவ்வாறு தானமாக வழங்கப்படவுள்ளன.

23 வயதான இசங்க ரணசிங்க என்ற இந்தப் பல்கலை மாணவன் ரயிலில் பயணித்தபோது தெமட்டகொட மற்றும் களனி நிலையங்களுக்கு இடையில் ரயிலிலிருந்து தவறி வீழ்ந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதனையடுத்து வைத்தியர்கள் பரிசோதனை நடத்தியபோது மாணவன் மூளைச்சாவடைந்து விட்டார் எனவும் வைத்தியர்கள் மாணவனின் பெற்றோரிடம் தெரிவித்தனர்.

வைத்தியர்களின் இந்த அறிவித்தலையடுத்து, இசங்காவின் அனைத்து உறுப்புக்களையும் தானமாக வழங்குவதற்கு இசங்காவின் பெற்றோர்கள் வைத்தியர்களிடம் சம்மதம் தெரிவித்துள்ளனர். (05)

## பசுமை ஹைட்ரஜன் மாநாடு இலங்கையில்

இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனமான யுஎஸ் எயிட் உடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இலங்கை பசுமை ஹைட்ரஜன் மாநாடு - 2023 நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவால் இலங்கை தேசிய ஹைட்ரஜன் வழிகாட்டல் வரைவு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

(05)

# பரதத்தை இழிவுபடுத்தி கருத்து தெரிவித்தவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரிப் போராட்டம்










பரதநாட்டியத்தையும், அதை பயிற்சி செய்பவர்களையும் இழிவுபடுத்தும் விதமாகக் கருத்துத் தெரிவித்த இஸ்லாமிய மதகுரு அப்துல் ஹமீதுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி அராலி பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அராலி பகுதியைச் சேர்ந்த பரதம் கற்கும் மாணவ, மாணவிகளும் அவர்களின் பெற்றோர்களும் இணைந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தில் உருத்திர சேனை மற்றும் சிவசேனையை சேர்ந்தோரும் பங்கேற்று இருந்தனர்.

தமிழர்களுடைய பாரம்பரிய கலைகளை இழிவுபடுத்துபவர்கள், தமிழரின் வழிபாட்டு முறை, வாழ்வியல், கலை, கலாசாரத்தைக் கொச்சைப்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும் சட்ட ரீதியாக தண்டிக்கப்பட வேண்டும் என போராட்டத்தில் கலந்து கொண்டோர் கோரினர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2023இல் வெளியிடப்பெற்றது.